மக்களுடைய நலனைக் கருதி, மீண்டும் இதை நீங்கள் பரிசீலிப்பீர்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 206, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

206—

சமுதாயக் கிணறு

***11042—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சி, வெள்ளிமலை நரிக்குறவர் காலனி இன மக்களுக்குச் சமுதாய நலக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நரிக்குறவர்கள் என்பவர்கள், இன்றும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இன மக்களாகும். அவர்களின் தொழில்கள் பாசி மணி, ஊசி விற்பது; ஆண்கள் காடுகளிலே சென்று காடை போன்ற பறவைகளைப் பிடித்து வேட்டையாடுவது; இத்தகைய தொழில்களில் ஈடுபட்டிருந்த அவர்களுக்கு, இப்போது அந்தத் தொழிலிலும்கூட நெருக்கடி வந்துவிட்டது. பாசி மணி போன்றவைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 23]

எல்லாம் கிராமக் கடைகளிலே விற்கப்படுகிற அளவுக்கு வந்துவிட்டன. அந்தத் தொழில் செய்கிற அந்தப் பெண்கள், பேசும்போதும், நடக்கும்போதும், உட்காரும்போதும், சினிமா பார்க்கும்போதும்கூட அந்த மணியைப் பின்னுகிற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவற்றில்கூட பெரிய அளவிலே வருமானம் இல்லை என்ற நிலை உருவாகி இருக்கிறது. ஆண்கள் எங்குமே வேட்டையாட முடியாது என்ற நெருக்கடியான நிலையில் இப்போது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் தொழில்கள் செய்ய அரசு நிதியுதவி வழங்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சி, வெள்ளிமலை நரிக்குறவர் காலனி இன மக்கள் சிலர் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சமுதாய நலக் கிணறு கொடுத்து வெட்டிக் கொடுத்தால் அவர்கள், சிறப்பான முறையிலே விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும்; அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்பகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைத்து—கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்வதற்கு அவர்கள் சங்கம் அமைத்து—அதன் மூலம் இவ்வாறு ஒரு கிணறு அமைப்பதற்கு விரும்பினால், அது சம்பந்தமாக அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும், ஏற்கெனவே 1965-1970 ஆம் ஆண்டுகளிலே சமுதாயக் கிணறு என்று பல்வேறு கிராமங்களிலே கிணறுகள் வெட்டி, அந்தக் கிணறுகள் அரைகுறையாக உள்ளன. அந்தக் கிணறுகளுக்குத் தேவையான மின் இணைப்பு வசதி மற்றும் நீர் ஆதாரம் இல்லாத காரணத்தினால், பல ஆண்டுகளுக்கு முன்பே, சமுதாயக் கிணறு அமைக்கின்ற திட்டம், வெட்டுகின்ற திட்டம் கைவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அவர்கள் உடனடியாகக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், அதன்மூலம் அவர்கள் 'போர்'—ஆழ்துளைக் கிணறுகள்—வெட்டி, அதன்மூலமாக விவசாயம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 207, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.